செ.வெ.எண்: 11 நாள்: 06.01.2018

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறவுள்ள குடியரசு தின விழாவினை சிறப்பாக நடத்தும் வகையில் அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் குடியரசு தினவிழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து அரசு அலுவலர்களுடனான முன்ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் 04.01.2018 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, கல்வித்துறை, தோட்டக்கலைத்துறை, நகராட்சி, தீயணைப்புத்துறை, போக்குவரத்துத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, செய்தி மக்கள் தொடர்புத்துறை, காவல் துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த குடியரசு தின முன் ஆய்வுக் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசிய போது தெரிவித்ததாவது:

நாடு முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26-ஆம் நாள் குடியரசு தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் (26.01.2018) அன்று நடைபெறவுள்ள குடியரசு தின விழாவினை நமது மாவட்டத்தில் சிறப்பாக நடத்தும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து அனைத்து துறை அரசு அலுவலர்களுடனான முன் ஆய்வுக் கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் காவல்துறையினர் ஆயுதப்படை மைதானத்தில் குடியரசுதினத்தன்று அணிவகுப்பு நடத்துதல், மைதானம் பாதுகாப்பு, மாவட்ட ஆட்சியர் அவர்களை முகாம் அலுவலகத்திலிருந்து சேமப்படை மைதானத்திற்கு அழைத்து வருதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளவும், பொதுப்பணித்துறையினர் மேடையில் வர்ணம் பூசி அலங்காரம் செய்தல் பணிகளையும், சார்ஆட்சியர் விழாவில் முக்கியப் பிரமுகர்கள் அமருவதற்கு ஏற்பாடு செய்தல், சுதந்திரப்போராட்ட தியாகிகள், மொழிப்போராட்ட தியாகிகள் போன்ற பல்வேறு நபர்களுக்கு விருது வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும். புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் சேமப்படை மைதானத்தை சுத்தம் செய்தல், தற்காலிக குடிநீர் தொட்டிகள் அமைத்தல், கழிப்பறை வசதிகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை குடியரசு தினவிழா நடைபெறுவது தொடர்பாக அனைத்து பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகளில் ஒளி, ஒலிபரப்புவதை உறுதி செய்யவும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அனைத்து துறை அலுவலர்களிடமிருந்தும் பயனாளிகள் பட்டியல் மற்றும் நற்சான்றிதழ் பெற தகுதியான நபர்களின் பட்டியல்களை தயார் செய்யவும், மருத்துவத்துறையினர் மைதானத்தில் அவசர சிகிச்சைக்கு தேவையான மருத்துவ வசதிகள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உள்ளிட்ட குழுவினை ஏற்படுத்தி விழா முடியும் வரை பணியாற்ற வேண்டும். இதே போன்று விழா தொடர்புடைய அனைத்து துறை அரசு அலுவலர்களும் குடியரசு தின விழா தொடர்பான தங்களது பணிகளை விரைவாக முடித்து

குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாட ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) திருமதி.பஞ்சவர்ணம், புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் (பொ) திரு.ஜீவாசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை**